[5th February 1966

Advisory Boards on Education

* 103. *Q.*—SRI S. MADHAVAN and PULAVAR K. GOVINDAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to constitute Advisory Boards for each Development District to advise the Special District Educational Officer in administering the former District Board High Schools; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) An Advisory Board for each Development District has already been constituted.

(*b*) The Advisory Board consists of the following official and non-official members.

(1) Collector of the District.—*Chairman.*

(2) All the members of the Standing Committee on Education of each District Development Council.—*Members.*

(3) The Divisional Engineer (Highways and Rural Works) concerned.—*Member.*

(4) The Special District Educational Officer concerned.—*Secretary.*

The Board gives its advice to the Special District Educational Officers on the administration of the former District Board High Schools.

திரு. செ. மாதவன் : இந்தக் குழு சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கும் உயர்நிலைப் பள்ளிகளைப் பற்றி மட்டும் ஆலோசனையில் எடுத்து உதவி செய்து வருகிறது. இந்தக் குழுவில் அந்தந்த டெவலப்மென்ட் கவுன்சிலில் இருக்கிற சட்ட மன்ற உறுப்பினர்களையும், பாராளுமன்ற உறுப்பினர்களையும் சேர்த்துக்கொள்ள அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கமிட்டி, சிறிய கமிட்டியாக இருக்கவேண்டும். ஆகவேதான் டெவலப்மென்ட் கவுன்சில் கல்விக் குழு அங்கத்தினர்களை மட்டும் சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இந்தக் குழு ஆண்டுக்கு எத்தனை முறை கூடவேண்டும் என்ற நியதி இருக்கிறதா ? எத்தனை முறை கூடியிருக்கிறது என்று அரசாங்கத்திற்குத் தகவல் கிடைத்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இத்தனை முறை கூடவேண்டும் என்ற நிர்ப்பந்தம் எதுவும் இல்லை.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தலைவர் அவர்களே, அநேக ஸ்பெஷல் டிஸ்ட்ரிக்ட் எஜுகேஷனல் ஆஃபீசர்கள் போட்டு இருந்து அவர்கள் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டார்கள். அவர்

5th February 1966]

களுக்கு பதிலாக வேறு ஆஃபீசர்கள் இன்னும் போடாமல் உதவியாக இருந்தவர்களே இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, தனியாக ஆஃபீசர் போட ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப் பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. எஸ். முருகையன் : ஸார், குழு நியமித்து ஒரு ஆண்டுக்கு மேல் ஆகியும் இது வரையில் ஒரு முறையும் கூடவில்லை என்பது உண்மையா ? அப்படியானால் இனிமேலாவது வருஷத்திற்கு ஒரு முறை, இரண்டு முறை கூட ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : குழுவிற்கு கலெக்டர் தலைவர். குழு கூடினால் ஏதாவது கவனம் செலுத்தவேண்டும், அஜெண்டா இருக்கவேண்டும். கலெக்டர் கூட்டாவிட்டால் உறுப்பினர்கள் யாராவது கூட்டும்படி கேட்கலாம். அப்படிக் கேட்டும் கலெக்டர் கூட்டவில்லை என்றால், அரசாங்கத்திற்குப் புகார் செய்யலாம், அதன் மீது அரசாங்கம் கவனம் செலுத்தும்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இந்தக் குழு ஆலோசனைக்காக என்று சொல்லப்படுகிறதே, ஆசிரியர்களை மாற்றுவது, பள்ளிக்கூடக் கட்டடம் கட்டுவது ஆகியவை போன்று எந்த எந்த முறையில் ஆலோசனை கூறும் அதிகாரம் இருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதையெல்லாம் இந்தக் குழுவே நிர்ணயித்துக்கொள்ளவேண்டும்.

திரு. கி. இரா. சம்பந்தம் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் குழு இது வரையிலும் என்ன சிபாரிசு செய்திருக்கிறது, சிபாரிசுகளில் என்னென்ன நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை அறிய முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவரவர்களே, அந்தந்த மாவட்டங்களில் உள்ள கல்விக் குழுவானது முதலில் பாடப் புத்தகங்களை செலெக்ஷன் செய்து கொண்டிருந்தார்கள். அந்த அதிகாரம் இப்பொழுது பறிக்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரம் இப்பொழுது கலெக்டரிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரம் பறிக்கப்பட்டதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒன்றிரண்டு மாவட்டங்களில் இதில் தவறுதல் நடந்ததாகத் தகவல் வந்து, அதற்குமேல் இப்பொழுது அதிகாரம் மாற்றிக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : இந்தப் பள்ளிகளிலே இருக்கின்ற ஆசிரியர்களை மாற்றுவது என்று சொன்னால் டிவிஷனல் இன்ஸ்பெக்டருடைய அதிகாரம் பெற்றுத்தான் மாற்ற வேண்டியிருக்கிறது. மூன்று மாவட்டங்களுக்கு ஒரு டிவிஷனல் இன்ஸ்பெக்டர்

தான் இருக்கிறார். அவரால் நிர்வகிக்க முடியவில்லை. ஆகவே, இந்த அதிகாரத்தை இந்த மாவட்டக் கல்விக் குழுவுக்குக் கொடுக்க அரசாங்கம் ஆலோசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆசிரியர்களை மாற்றும் பொறுப்பு இந்தக் குழுவுக்குக் கொடுப்பதாக இல்லை.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : இந்த டிஸ்ட்ரிக்ட் கவுன்சிலில் அநேக கமிட்டிகள் இருக்கின்றன. அந்தக் கமிட்டிகளைப்போன்றே இதுவும் இருப்பதால் இது கூடுவதற்கு 'கோரம்' இல்லாமல் இருக்கிறது. லட்சக் கணக்கான ரூபாய்கள் செலவு செய்கின்ற வேலைகளைக் கவனிக்கின்ற இந்தக் குழுவுக்குத் தனியாக அங்கத்தினர்களை சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்து இந்தக் குழுவை மாற்றியமைப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது இருக்கிற குழு தற்காலிகமாக வேலை செய்து வருகிறது. இது எப்படி வேலை செய்கிறது என்ற அனுபவத்தைக்கொண்டு, பின்னால் இதை மாற்றியமைக்கவேண்டுமா என்று அப்பொழுது இருக்கிற உசிதப்படி செய்யவேண்டிய விஷயம்.

District Board High Schools

* 104. *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of High Schools functioning as District Board High Schools in the State; and

(*b*) the reasons for continuing this classification even after the disappearance of the District Boards?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 1,168 Boys High Schools ; and 79 Girls High Schools.

(*b*) For administrative convenience, they are kept as a separate entity.

SRI C. CHIRANJEEVULU NAIDU : In continuing these district board high schools, Collectors have been entrusted with the work of the defunct district boards. To what extent are Collectors responsible for the defunct district boards?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : So far as schools are concerned, Education Department is in charge of the schools and there is a Special Educational Officer who is managing the schools.

திரு ச. கணேசன் : உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையிலே ஆண்களுக்குள்ள உயர்நிலைப்பள்ளிகளின் தொகை ஆயிரத்திற்கு மேற்பட்டு இருக்கிறபோது, பெண்களுக்குள்ள பள்ளிகளின் தொகை குறைந்திருப்பதற்கு காரணம் என்ன? இந்த நிலையில் அதை அதிகரிப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.